# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | CC.194/2026 | Date | : | 10.08.2026 |
| Deposition of Witness for | : | அ.சா.1 | Taluk | : | |
| Name | : | திரு. சேகரன் | Calling | : | |
| Father Name | : | | Religion | : | |
| Village | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 10.08.2026.

(எதிரி அண்ணாமலை ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை** :

1) நான் தற்போது சேலம் மாவட்டம், தேவூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.04.2026 ம் தேதி, மாலை சுமார் 05.30 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் திரு.சக்திவேல் என்பவருடன் நானும், இரண்டாம்நிலை காவலர் திரு.ராஜா ஆகியோர்களுடன் மதுவிலக்கு மற்றும் குற்ற தடுப்பு ரோந்து அலுவலாக, தேவூர் காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட, வட்ராம்பாளையம் வாய்க்கால்கரை அருகே கண்காணித்துக்கொண்டு சென்றபோது, அங்கு சந்தேகபடும் படியாக கையில் பாலித்தீன் சாக்குபையுடன் நின்றிருந்தவரை பிடித்து விசாரித்தபோது, பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து அவர் தனது பெயர் அண்ணாமலை, த/பெ.அய்யாங்குட்டி, வட்ராம்பாளையம், ஒக்கிலிப்பட்டி, காவேரிப்பட்டி கிராமம், சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம் என்று கூறியவரை, மேலும் விசாரிக்க அவர் அரசு அனுமதியின்றி சுயலாபத்திற்காக கள்ளத்தனமாக அரசு மதுபானத்தை வாங்கி வந்து விற்பனை செய்ய வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை கைதுக்கான காரணம் கூறி மாலை சுமார் 05.45 மணிக்கு கைது

செய்தும், அவர் ஆஜர் செய்த 180 ML அளவு கொண்ட EXPRESS BRANDY – 12, BLACK PEARL BRANDY – 10 ஆக மொத்தம் 22 மதுபாட்டில்களை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியபோது பொதுஜன சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வராததால் உடனிருந்த எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினார்.

2) மேற்படி கைப்பற்றுதல் மகசரில் நானும், இரண்டாம்நிலை காவலர் திரு.ராஜா என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **(கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

3) பின்னர் கைப்பற்றிய வழக்கு சொத்தை தமிழ்நாடு மதுவிலக்கு சட்டப்பிரிவு 32-ன் படி சம்பவ இடத்திலேயே அழித்தல் மகஜர் மூலம் அழிக்கப்பட்டது. மேற்படி அழித்தல் மகசரில் நானும், இரண்டாம்நிலை காவலர் திரு.ராஜா என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் அழித்தல் மகசரிலுள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். (**அழித்தல் மகசரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4) பின்னர், கைது செய்த எதிரியை மாலை சுமார் 06.30 மணிக்கு நிலையம் அழைத்து வந்து எதிரியின் மீது தேவூர் காவல் நிலைய குற்ற எண்.87/2026, சட்டப்பிரிவு 4(1)(C) of TNP(A) ACT-ன் கீழ் வழக்கு பதிவு செய்தார். இது சம்பந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரனை செய்தார்.

**<u>குறுக்கு விசாரணை -</u>**

1) மதுபாட்டில் விற்பனை செய்வதாக எங்களுக்கு தகவல் கிடைத்ததா என்றால் இல்லை. யார் யார் எந்தெந்த வாகனத்தில் சென்றோம் என்றால் நானும், இரண்டாம்நிலை காவலர் திரு.ராஜா ஒரு இருசக்கர வாகனத்திலும், காவல் உதவி ஆய்வாளர் திரு.சக்திவேல் ஒரு இருசக்கர வாகனத்திலும் சென்றோம்.

2) எதிரி கையில் என்ன கலர் பை வைத்திருந்தார் என்றால் பாலித்தீன் சாக்கு பை வைத்திருந்தார். அதனை கைப்பற்றினோமா என்றால் காவல் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். நாங்கள் ரோந்து சென்றபோது வழியில் எதிரியை தவிர வேறு யாரையாவது தணிக்கை செய்தோமா என்றால் இல்லை. எதிரி அவர் வைத்திருந்த மதுபானத்தை யாரிடமாவது விற்றதாக விசாரித்து வாக்குமூலம் பெற்றோமா என்றால் இல்லை. எதிரி மதுபானங்களை விற்ற பணத்தை அவரிடம் இருந்து கைப்பற்றினோமா என்றால் இல்லை.

3) நான் சம்பவ இடமே செல்லவில்லை என்றும், எதிரியிடம் இருந்து மதுபானங்களை கைப்பற்றவில்லை என்றும், புள்ளிவிவர கணக்கிற்காக எதிரிமீது பொய் புகார் பெற்று அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Sekaran